# உரையாடல் - 5

**பங்குபெறுபவர்கள்** :- அண்ணன், தங்கை.

அண்ணன் : செல்வி நாம் இன்று நூல்நிலையம் செல்வோமா?
தங்கை : சரியண்ணா, நான் நூல்நிலையத்திற்கு வருகிறேன்.
அண்ணன் : சாப்பிட்டுவிட்டு செல்வோம்.
தங்கை : சரியண்ணா.
அண்ணன் : வா செல்வி போகலாம்.
தங்கை : இதோ வருகிறேன் அண்ணா.
அண்ணன் : செல்வி, உனக்கு யாருடைய நூல்கள் படிக்க ரொம்பப் பிடிக்கும்?
தங்கை : பாரதியார் கவிதைகள், ஜெயகாந்தன் சிறுகதைகள் பிடிக்கும்.
அண்ணன் : நூல்நிலையம் வந்துவிட்டது.
தங்கை : அண்ணா, உனக்கு யாருடைய நூல்கள் பிடிக்கும்?
அண்ணன் : கண்ணதாசன் கவிதைகள், பாரதியாரின் சிறுகதைகள், ராஜம் கிருஷ்ணன் சிறுகதைகள் பிடிக்கும்
தங்கை : இப்பொழுது நீ எந்த நூல் படிக்க போகிறாய்?
அண்ணன் : நான் பள்ளியில் ஒரு கட்டுரை போட்டியில் சேர்ந்துள்ளேன், அதற்காக குறிப்பெடுக்க வந்துள்ளேன். நேரம் கிடைத்தால் செய்தித்தாள் படிப்பேன்.
தங்கை : அண்ணா கட்டுரை போட்டியின் தலைப்பு என்ன?
அண்ணன் : அழிந்து வரும் அரிய மிருகங்களைப் பற்றிய கட்டுரை எழுதவேண்டும்.
தங்கை : அண்ணா நான் உங்களுக்கு உதவி செய்யவா?
அண்ணன் : வேண்டாம் செல்வி. நீ உனக்கு பிடித்ததைப் படி.
தங்கை : நான் செய்தித்தாள் மற்றும் வார இதழ்கள் படிக்கப்போகிறேன்.
அண்ணன் : சரி படி. பாரதியார் கவிதைகள் புத்தகம் எடுத்து வை. நான் படிக்க வேண்டும் .
தங்கை : சரியண்ணா, குறிப்பெடுத்து முடித்துவிட்டீர்களா?
அண்ணன் : குறிப்பெடுத்துவிட்டேன் செல்வி, சிறிது நேரம் பாரதியார் கவிதைகள் படிக்க போகிறேன்.
தங்கை : நான் பாண்டிய மன்னர்களின் வரலாற்றுப் புத்தகம் படிக்கப் போகிறேன்.
அண்ணன் : செல்வி இன்னும் சிறிது நேரத்தில் வீட்டிற்கு செல்லலாம்.
தங்கை : சரியண்ணா.

www.kids.noolagam.com